தகவல் கோரல்

வேண்டும் என்று சொல்வதை நான் எப்படி அனுமதிக்க முடியும்? (குறுக்கீடு) தயவுசெய்து வேண்டாம், அடுத்த பிரச்சினைக்குச் செல்லலாம், உட்காருங்கள். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. யூகத்தின் அடிப்படையில் அல்ல. இது முக்கியமான பிரச்சினை. பாதுகாப்புப் பற்றிய பிரச்சினை. இன்னும் சொல்லப் போனால்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் சொன்னேன். அதுபற்றி முழுமையாக விளக்கங்களோடு தகவல் கொடுப்பார்களேயானால் நாளை எடுத்துக் கொள்வது பற்றிப் பரிசீலிக்கிறேன் என்பதை நான் தெரிவித்து இருக்கிறேன். அதையே இப்போதும் தெரிவிக்கிறேன்.

3. சிறப்பு கவன ஈர்ப்பு

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கமுதி போலீஸ் நிலையம் அருகில் இலங்கைப் போராளி தப்பிக்க முயன்றபோது சுடப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி போலீஸ் நிலையம் அருகில் இலங்கைப் போராளி தப்பிக்க முயலும்போது சுடப்பட்ட நிலைதனைக் குறித்துப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. வி. தண்டாயுதபாணி, திரு எஸ். எஸ். ராமசுப்பு, திரு. வ. சத்தியமூர்த்தி ஆகியோர் என்னிடத்திலே ஒரு அறிவிப்புக் கொடுத்திருக்கின்றார்கள். (குறுக்கீடு).

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த நேரத்திலே பாயிண்ட்ஆஃப் ஆர்டர் வராது. (குறுக்கீடு). உட்காருங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின் எப்போது வரும் சார்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்போது வரும் என்பதைப் பற்றி என்னுடைய அறையில் வந்து கேளுங்கள். (குறுக்கீடு) இப்போது, பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள். திரு. வி. தண்டாயுதபாணி, கமுதி பிரச்சினை பற்றி நீங்கள் விளக்கம் கோரலாம். (கூச்சல்-குழப்பம்).

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர்? இப்போதுதான் பிசினஸ் ஆரம்பிக்கப் படுகிறது. (குறுக்கீடுகள்) இப்போது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை என்கிறேன். பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று கேட்டு எத்தனையோ தரம் பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லாத பிரச்சினை பற்றி பேசுகிறீர்கள் என்பது தெரியும். (குறுக்கீடுகள்) இந்த நேரத்திலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. நாம் இப் பொழுதுதான் பிசினஸ் ஆரம்பிக்கப் போகிறோம். (குறுக்கீடு)

முற்பகல் 11-15

அவையினுடைய அலுவல் இப்பொழுது தான் தொடங்குகிறது. தொடங்குகிறபோதே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்? (குறுக்கீடு) அது தான் இல்லையென்று சொன்னேன். தொடங்குகிறபோது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லையென்று சொல்கிறேன். (குறுக் கீடுகள்) அவையின் நேரத்தை வீணடிக்க வேண்டும் என்கிற முயற்சியில் ஈடுபட்டால் அது உங்களுடைய விருப்பம். இன்று முக்கியமான அலுவல்கள் எடுக்க இருக்கிறோம். திரு. தண்டா யுதபாணி. (குறுக்கீடு) மாண்புமிகு முதல் அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, A point of order can be raised only with regard to the business before the House. The business before the House is yet to be taken up. அதை எடுக்கவிடாமல் இந்த உறுப்பினர்கள் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தெரிவித்தபடி இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் வராது. இங்கே எல்லோருக்கும் பல அலுவல்கள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவை அலுவல்கள் அமைதியாக நடைபெற ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு வி. தண்டா யுதபாணி.

திரு. வி. தண்டாயுதபாணி: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, கடந்த புதன் கிழமை அன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் பாலசுப்பிரமணியம் என்கின்ற விடுதலைப் புலியை கோர்ட்டுக்கு அழைத்துச் செல்லுகின்றபோது, கமுதியிலுள்ள காவல் நிலையத்திற்கு அருகிலே அந்த விடுதலைப் புலி, பாண்டி என்கின்ற போலீஸ் கான்ஸ்டபிளோடு தகராறு செய்து, தப்பி ஓடுவதற்காக முயற்சி செய்திருக்கின்றார். பெரும் தகராறு ஏற் பட்டு அவர் அந்த ஜீப்பிலேயிருந்து எகிறி குதித்து ஓடுகிறபோது,

1993, ஏப்ரல் 16]

அந்த ஜீப்பிலேயிருந்த காவல் துறையினுடைய சப்-இன்ஸ்பெக்டர் அவரை சுட்டு இருக்கின்றார். அதன் காரணமாக அந்த விடு தலைப் புலி இறந்து போய்விட்டார். இதை நான் குறிப்பாக சொல்லுகின்ற காரணம், ஒன்று விடுதலைப் புலிகள் காவல் நிலை யத்திலேயிருந்து கோர்ட்டுக்கு அழைத்துச் செல்லுகின்றபொழுது அவர்கள் சுட்டுக் கொல்லப்படுகின்றார்கள். ** தயவுசெய்து முன் எச்சரிக்கையாக வெகு கடுமையான முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். போலீஸ் துறை அதிலே கடுமையான நட வடிக்கை எடுப்பதற்கு அரசு நல்ல உத்தரவை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, விடுதலைப் புலிகள் பற்றி தினசரி செய்திகள் வருகின்ற காரணத்தினால் இதை நான் சொல்ல ஆசைப்படுகின்றேன்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து, இந்தப் பிரச்சினையோடு நிறுத்திக்கொள்வது நல்லது. இந்தப் பிரச்சினையை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். இதை நான் அர சாங்கத்திற்குத் தெரிவித்து, அரசாங்கத்திடமிருந்து பதில் பெற்று அதை இங்கே தெரிவிக்க இருக்கிறேன். எனவே, இந்தப் பிரச் சினையோடு நிறுத்திக்கொள்ள வேண்டும்.

திரு. வி. தண்டாயுதபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதலைப் புலிகள் விஷயத்திலே மிகவும் எச்சரிக்கையாக செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்ற காரணம், நடந்து விட்டதற்குப் பின்னாலே நாம் வருத்தப்படுவதிலே பிரயோஜனம் இல்லை**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சம்பந்தம் இல்லாத பிரச்சினை. அதை நீங்கள் வேறு வகையிலே கிளப்ப வேண்டும். இப்பொழுது இந்தப் பிரச்சினையோடு முடித்து உட்காருங்கள். (குறுக்கீடு) அதையெல்லாம் வேறு வகையான முறையிலே நீங்கள் கொண்டுவர வேண்டும். திரு. வ. சத்தியமூர்த்தி.

முற்பகல் 11—20

*திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் ஒரு இலங்கைப் போராளி கைது செய்யப்பட்டு அவர் தனக்குக் கூட்டாளி ஒருவர் வாலிநோக்கம் காவல் சரகம் கீழமுந்தல் கிராமத்தில் வசிப்பதாக சொன்னத் தகவலின் பேரில் கீழ்முந்தலில் ஒரு இலங்கைப் போராளி நடு இரவில் கைது செய்யப்பட்டு தூத்துக்குடிக்கு அழைத்துச் செல்லப்படுகின்றார். அவர் ஒரு தகவலைக் கொடுக்கின்றார்

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[திரு. வ. சத்தியமூர்த்தி] [1993 ஏப்ரல் 16

கீழமுந்தலில் வசிக்கின்ற பாலசுப்பிரமணியம் எனது நண்பர் அவர் மூலம் நான் சில நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறேன் என்று தகவல் சொல்லியிருக்கிறார். அதேபோன்று கடந்த 10 தினங்களாக பாலசுப்பிரமணியம் என்ற இளஞ்சம்பூர் கிராமத்தைச் சேர்ந்த நபரை காவல் துறையினர் தேடி வந்தார்கள். அவர் கைது செய்யப்பட்டு மறுநாள் காவல் நிலையத்தில் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தகவல் வந்து பரமக்குடி சார் ஆட்சியர் விசாரணை செய்திருக்கிறார். துப்பாக்கிக் காயங்களுக்கு அப்பாற்பட்டு அந்த வாலிபர் உடலிலே வேறு காயங்களும் இருப்பதாக ஒரு சந்தேகத்தை, விசாரணையின்போது அந்த சார் ஆட்சியர் எழுப்பிவிட்டுச் சென்றிருக்கிறார். சுட்டுக்கொல்லப்பட்ட அந்த வாலிபர் விடுதலைப் போராளி அல்ல. இளஞ்சம்பூர் கிராமத்தைச் சேர்ந்த ஒரு வாலிபர். தன்னுடைய குடும்பத்தில் உறவோடு இல்லாமல் கீழமுந்தல் என்ற கிராமத்திற்குச் சென்று அந்த கிராமத்தில் ஒரு பெண்ணோடு இணைந்து வாழ்ந்து அதன் காரணமாக குடும்பத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டவர். அவர் யாரோடும் இலக்கமாக, பகிரங்கமாக வாழ்க்கை நடத்தாத ஒரு ஊதாரி வாலிபராக இருந்திருக்கிறார். அவர் யாருடன் தொடர்பு வைத்திருந்தார், அந்த இலங்கைப் போராளியோடு என்ன உறவு என்பதைத் தீர விசாரித்தால், அந்தப் பகுதியில் கடத்தல் சம்பந்தமான ஏதேனும் ஒரு தொழில் நடந்து அதற்கு இவர்கள் எல்லாம் உறுதுணையாக இருந்திருப்பார்களேயானால் பல புதிய தகவல்கள் வர இயலும். ஆகவே தீர விசாரிக்க ஒரு சிறப்பு விசாரணைக்கு ஏற்பாடு செய்து அந்த வாலிபர் யாருடன் எல்லாம் தொடர்பு வைத்திருந்தார், என்ன சட்டவிரோதமான செயல்கள் அங்கே நடைபெற்றன என்பதை நாட்டுக்குக் கொண்டுவர வேண்டும் என்று இந்த அவையின் மூலம் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை அகதியான ராஜ்குருஸ் என்பவர் 10-4-1993 அன்று இரவு 11-30 மணிக்கு ஒரு கைத்துப்பாக்கி மற்றும் 6 தோட்டாக்களுடன் தூத்துக்குடி தெர்மல் நகர் காவல் நிலைய ஆய்வாளரால் கைது செய்யப்பட்டார். ராஜ்குருஸின் ஒப்புதல் வாக்கு மூலத்தின்படி இ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தைச் சேர்ந்த சிவா என்கிற சிவானந்தன் என்பவர் இராமநாதபுரம் வாலிநோக்கம் காவல் நிலைய எல்லைக்குள் அமைந்த கீழ்முந்தல் கிராமத்தில் கைது செய்யப்பட்டு, அவரிடமிருந்து 10 கிலோ கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது. அவர் தூத்துக்குடி தெர்மல் நகர் காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்

1993 ஏப்ரல் 16] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

பட்டார். தெர்மல் நகர் காவல் நிலையத்தில் காவலர் 137 கருப்பசாமி, சிவானந்தனுக்குக் கைவிலங்கு மற்றும் லீடிங செயின் மாட்டிக் கொண்டிருந்தபோது, சிவானந்தன் அந்த காவலர்மீது பலப்பிரயோகம் செய்து, அவரிடமிருந்து கைவிலங்கு மற்றும் லீடிங் செயின் ஆகியவற்றுடன் தப்பி விட்டார். தப்பிச் சென்ற சிவானந்தன் 13-4-1993 அன்று இரவு 9-00 மணிக்கு கமுதியில் கைது செய்யப்பட்டார்.

கமுதி காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் தலைமையில் பிடிபட்ட சிவானந்தன்மீது தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அவருடைய ஒப்புதல் வாக்குமூலத்தில், ஒரு 9 எம்.எம். பிஸ்டலும் 6 தோட்டாக்களும் வால்நோக்கம் காவல் நிலைய எல்லை, இளஞ்செம்பூர் கிராமத்தைச் சேர்ந்த கீழமுந்தல் கிராமம் முத்துவேல் தேவரின் மகன் பாலு என்கிற பாலசுப்பிரமணியம் என்பவரிடம் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். கமுதி காவல் துறைக் கண்காணிப்பாளர் தலைமையில் ஒரு குழு சிவானந்தத்தை அழைத்துக்கொண்டு பாலு என்கிற பாலசுப்பிரமணியத்தைத் தேடிச் சென்றனர். சிவானந்தன் அடையாளம் காட்டியபடி, பாலு என்கிற பாலசுப்பிரமணியத்தை 14-4-1993 அன்று அதிகாலை 3-30 மணிக்கு செங்கப்படை கிராமத்தில் கைது செய்ய முற்பட்டபோது, கழுத்தில் அணிந்திருந்த ஏ.கே. 47 துப்பாக்கி யின் காலி தோட்டாவுடன் கூடிய சயனைடு குப்பியை அவன் உட்கொள்ள முயற்சித்தான். அது தடுக்கப்பட்டு சயனைடு குப்பி கைப்பற்றப்பட்டது. துப்பாக்கி பற்றி தகவல் ஏதும் இல்லாததால் துப்பாக்கி கைப்பற்றப்படவில்லை.

முற்பகல் 11-25

14-4-1993 அன்று காலை 4.10 மணிக்கு சிவானந்தன் மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரையும் காவல் குழுவினர் கமுதி காவல் நிலையத்திற்குக் கொண்டுவந்தவுடன் பாலசுப்பிரமணியம், தலைமைக் காவலர் 637 பரசுராமர் என்பவரது 'ஸ்கேபேடு-லிருந்து 'பைனட்' கத்தியைப் பிடுங்கி தலைமைக் காவலர் 570 பாண்டியனின் அடிவயிற்றில் குத்தி விட்டு தப்பி ஓடினான். எதிரில் அவனைப் பிடிக்க முயற்சி செய்த மற்ற காவலர்களையும் அவன் தாக்க முற்பட்டிருக் கிறான். கமுதி காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அவர் களின் உத்தரவின்படி, காவல் நிலைய பாரா காவலர் 322 வழிவிட்டான் என்பவர் துப்பாக்கியால் இரண்டு முறை பாலசுப்பிரமணியத்தை நோக்கி சுட்டார். ஒரு தோட்டா பாலசுப்பிரமணியத்தின்மீது பட, கமுதி ஆய்வாளர் குடியிருப்பு முன்பு அவன் கீழே விழுந்து இறந்துவிட்டான்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1993 ஏப்ரல் 16

தலைமைக் காவலர் 570 பாண்டியன் கொடுத்த புகாரின் பேரில், கமுதி காவல் நிலைய குற்ற எண் 103/93 I.P.C. 307 மற்றும் Cr.Pc. 174 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. பரமக்குடி சார்-ஆட்சியர் பிரேத விசாரணை நடத்தியுள்ளார். சிவா என்கிற சிவானந்தன் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இப்போது நான் தெரிவித்த தகவலிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் தண்டாயுதபாணி அவர்கள் இங்கே தெரிவித்த தகவல்கள் அனைத்துமே தவறானவை என்பது தெளிவாகிறது. சிவா என்கிற சிவானந்தன் விடுதலைப்புலி அல்ல. அவர் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று தெரிய வந்துள்ளது.

சுட்டுக் கொல்லப்பட்ட பாலு என்கிற பாலசுப்பிரமணியம் விடுதலைப்புலி அல்ல. அவர் தமிழ்நாட்டிலே வசித்து வந்த ஒருவர். ஏற்கனவே இந்த ஒரு சம்பவத்தைப்பற்றி இங்கே அவையில் எழுப்ப பேரவைத் தலைவர் அனுமதி வழங்கி யுள்ளதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டதால் இந்த ஒரு சம்பவத்தைப் பற்றிய அறிக்கையைத்தான் நான் பெற்று அது சம்பந்தமான விவரங்களைத் தான் இப்போது இந்த அவைக்கு தெரிவித்திருக்கிறேன். எனவே ஏற்கனவே பேசிய திரு. தண்டாயுதபாணி அவர்கள், இந்த குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு, குறிப்பிட்ட சம்பவத்திற்கு சம்பந்தம் இல்லாமல் தெரிவித்த மற்ற அனைத்துக் கருத்துக்களையும் பேரவைத் தலைவர் அவர்கள் அவைக் குறிப்புகளிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தண்டாயுதபாணி அவர்கள் பேசுகின்றபோதே குறிப்பிட்டேன். நீங்கள் இந்த நேரத்தில் எந்த சம்பவத்தைப்பற்றிப் பேச என்னிடத்திலே அனுமதி கேட்டு, நான் அனுமதி அளித்திருக்கிறேனோ அந்த சம்பவத்தைப்பற்றி மட்டும் பேசுவதற்குத்தான் அப்போது அனுமதி அளித்தேன். அதற்கு மேற்கொண்டு செல்லாதீர்கள் என்று சொல்லச் சொல்ல இந்த சம்பவத்தை விட்டுவிட்டு மற்ற சம்பவங்களைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே அது இந்த நேரத்தில் (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. தண்டாயுதபாணி அவர்கள் எல்லாம் தவறான தகவல்களாகவே தந்திருக் கிறார் என்பதற்கு வேறு ஒரு எடுத்துக்காட்டையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அவர் **

---

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

1993 ஏப்ரல் 16] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

என்று தெரிவித்தார் அதுவும் தவறான தகவல். எனவே இது தேவையற்ற விவாதம், ஆதலால் திரு. தண்டாயுதபாணி அவர்கள் இந்த நேரத்தில் பரவலாக எல் டி.டி.யின் நடமாட்டத்தைப்பற்றிச் சொன்ன கருததுக்களும் மற்றக் கருத்துக்களும் இந்த அவைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அப்போதே தெரிவித்தேன். (குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்லி விடுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. தண்டாயுதபாணி அவர்கள் குறிப்பிட்டது அவைக் குறிப்பிலே இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் பதிலுரையும் அவைக் குறிப்பிலே இருக்கிறது. எனவே இரண்டுமே அவைக் குறிப்பிலே (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இப்போது நான் இறுதியாக சொன்னதைக்கூட தாங்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கலாம் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நான் சொல்கிறேன். (குறுக்கீடு). நீங்கள் சொல்லிவிட்டீர்கள். இல்லை நீங்கள் சொல்லி விட்டீர்கள். (நீங்கள் சொன்னதற்குப் பிறகு நான் பதில் சொல்ல வேண்டாமா? (குறுக்கீடு) இல்லை. நீங்கள் சொன்னீர்கள். நான் உங்களைச் சொல்ல அனுமதித்து நீங்கள் இருக்கட்டும் என்ற வேண்டுகோளைச் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) எப்போதுமே உங்களை நான் அனுமதித்து, நீங்கள் சொன்னதற்குப் பிறகு என்னைப் பதில் சொல்லிவிடாமல் தடுத்து என்னையே பேச விடமாட்டேன் என்கிறீர்கள். இப்படி நீங்கள் சொன்னால் என்ன அர்த்தம்? எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தவைலர் அவர்களே, பொதுவாக பேரவை நடந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் பல பிரச்சினைகள் இங்கே எழுப்பப்படுகின்றன. நாமே கவலை கொள்ளத்தக்க சம்பவங்கள் வெளியே நடைபெறுகின்ற நேரத்தில் அல்லது அதுபோன்ற சம்பவங்களுக்கானமுன்னேற்பாடுகள் நடைபெறுவதாக தகவல்கள் வருகின்ற நேரத்திலே அவையிலே அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவர முற்படுகிறேன். அதிலே சரியான தகவல் எது, சரியில்லாத தகவல் எது என்பதைச் சொல்வதற்கு அரசுக்கு உரிமையிருக்கிறது.

[1993 ஏப்ரல் 16

முற்பகல் 11-30

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான நாட்டு நடப்புகளைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவர மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லா உரிமையும் இருக்கிறது அந்த உரிமையை நான் மறுக்கவில்லை. அதனை பேரவைத் தலைவரின் அனுமதியோடுதான் இந்த அவையில் எழுப்ப வேண்டும். இங்கே தண்டாயுதபாணி அவர்கள் தமிழ்நாட்டில் ஒட்டுமொத்தமாக எல்.டி.டி.இ.யின் நடமாட்டதலைதப்பற்றி இப்படியெல்லாம் அவர்கள் சொல்லப்போகிறார்கள் என்று ஏற்கனவே தெரிந்திருந்தால் அதற்கான பதிலையும் நான் இங்கே எடுத்து வந்திருப்பேன். உங்களுக்கு இந்த அவையில் எல்லா பிரச்சினைகளும் எழுப்புவதற்கு உரிமை இருக்கிறது என்றால் அதற்கு எங்களுக்கும் போதுமான அவகாசம் கொடுக்கப்பட்டு, அதற்குத் தேவையான பதில்களைத் தருவதற்கு எங்களுக்கும் இங்கே உரிமை இருக்கிறது. அதற்கான அவகாசமும் எங்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி).

எனவே, ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை இங்கே கொடுத்து பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற்று, அதற்கான பதிலை நாங்கள் தயார் செய்துகொண்டு வந்திருக்கின்றபோது அதற்கு சம்பந்தம் இல்லாத, தொடர்பு இல்லாத, இன்னும் பல பிரச்சினைகளை எல்லாம் எழுப்பிக் கொண்டிருந்தால், அதற்கு எங்களுக்குப் பதில் சொல்வதற்கும் வாய்ப்புத் தரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நேரத்தில் எழுப்பக் கூடாது என்று சொல்கிறோம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து எதிர்க் கட்சித் தலைவர் உட்கார வேண்டும். நீங்கள் சொல்லி விட்டீர்கள். (குறுக்கீடு). தண்டாயுதபாணி பேசிக் கொண்டிருக்கிறபோதே சொன்னேன்.(குறுக்கீடு) இல்லை, திரும்பத் திரும்ப அனுமதி இல்லை. அனுமதி இல்லை என்று சொல்லி, அதை நீங்கள் ரெக்கார்ட் செய்வது நல்லதல்ல. (குறுக்கீடு) உங்களுக்கு அனுமதி அளித்து, நீங்கள் இரண்டும் இருக்கலாம் என்று சொன்னீர்கள். (குறுக்கீடு). தண்டாயுதபாணி பேசிக் கொண்டிருக்கிறபோதே '' நீங்கள் என்னிடத்திலே கொடுத்த குறிப்பை விட்டுவிட்டு, வேறு சில குறிப்புகளை எல்லாம் பேசுகிற காரணத்தினால் அது தேவையில்லையென்று '' நான் சொன்னேன். அதையும் மீறி அவர் பேசினார் எனவே அவர் பேசியதில் இந்தப் பிரச்சினை தவிர மற்ற பிரச்சினைகளெல்லாம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. அந்தப் பிரச்சினை பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த பதில் உரையும், அந்த ஒரு பகுதி மட்டும், நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்).

1993 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு வறட்சி வருவதை எண்ணிப் பார்த்து வறட்சியினால் தண்ணீர், குடி தண்ணீர் பஞ்சம் இருக்கக் கூடாது என்று எண்ணி தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் முன்கூட்டியே அதற்கு வேண்டிய பணம் ஒதுக்கியதனால் குடிதண்ணீர் பஞ்சம் இல்லாமல் சென்ற ஆண்டு சமாளிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல இந்த ஆண்டும்.. (குறுக்கீடுகள்)

3. சிறப்பு கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதி போலீஸ் நிலையம் அருகில இலங்கைப் போராளி தப்பிக்க முயன்றபோது சுடப்பட்டது குறித்து— தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பொழுது ஒரு முக்கியமான பிரச்சினையை, வேடசந்தூர் தொகுதியினுடைய வறட்சி பற்றிய அறிவிப்பைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அவரைப் பேச விடாமல், அரசாங்கம் அந்த வறட்சி நிவாரணப் பணிக்கு எடுக்கிற முடிவுகளுக்குத் தடையாக இருப்பது முறையல்ல. (குறுக்கீடுகள்).

(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

முற்பகல் 11-35

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையைப் பொறுத்த வரையிலும் நீண்ட நெடுங்காலமாகவே ஜீரோ ஹவர் என்று ஒன்று இல்லவே இல்லை. இந்த ஜீரோ ஹவரை எந்த ஒரு பேரவைத் தலைவரும் அனுமதித்ததும் இல்லை. எங்கேயும் சட்ட விதிகளில் ஜீரோ ஹவர் என்று ஒன்று இல்லை. தாங்களாக விளக்கங்கள் கேட்க வேண்டுமென்று சில சமயங்களில் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கேட்கிற போது, அவர்களுக்குத் தாங்கள் உரிமை தந்து, பிரச்சினைகளை எழுப்பலாம் என்றும், அதற்கான விடையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ அல்லது உரிய அமைச்சரோ எடுத்துத் தெரிவிப்பதன் மூலம் நாட்டு மக்களுக்குத் தெளிவும், திடமும் ஏற்படும் என்று கருதி, தாங்கள் பெருந்தன்மையோடு அவர்களை சில பிரச்சினைகளை எழுப்ப அனுமதிக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு நான் அனுமதித்ததுகூட, 2 பிரச்சினைகளும் எதிர்க் கட்சியினர் கொடுத்ததே. அதிலும் முக்கியமான பிரச்சினை, திரு. போளூர் வரதன் அந்தப் பகுதிக்குத் தண்ணீர்விட வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதெல்லாம் விதி 55-லேதான் அனுமதிக்கப்படும். அதை ஸ்பெஷல் மென்ஷனாக பேசுங்கள், பேசுங்கள் என்று நான் சொன்னபோது, அந்த உறுப்பினர் பேச எழுந்தபோது, பக்கத்தில் இருந்தவர்கள் அவரைப் பிடித்து, அழுத்தி உட்கார வைத்தார்கள். மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஒரு பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தண்டாயுதபாணி அவர்கள் கேட்டபோது, அதற்குத் தாங்கள் பெருந்தன்மையோடு அனுமதி அளித்தீர்கள். அதற்குப் பதிலையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக இருக்கின்ற நிலைமையை எடுத்துத் தெரிவித்தார்கள். ஆகவே கமுதியிலே ஒருவர் சுடப்பட்டார். அவர் விடுதலைப் புலியா, அல்லவா என்ற பிரச்சினையை அவர் எழுப்புகிறபோது, அதற்கு திட்பமாக, திட்டவட்டமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பதிலை எடுத்துத் தெரிவித்து, அதற்கான விளக்கத்தை இந்த நாடு பெற வேண்டுமென்பதற்காக தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை விட்டு மேலும் மேலும் பேசுவார்களானால், அதற்குப் பதில் இல்லாமல் நின்று விடுமானால், இந்த நாட்டிலே குழப்பம் ஏற்படுமென்ற காரணத்தால்தான், அந்தப் பிரச்சினையை முறைப்படி அவர்கள் எழுப்பினால் அதற்கும் பதில் சொல்ல நான் தயாராக இருக்கிறேன் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவாகக் குறிப்பிட்டார்கள். இதற்குப் பிறகும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்கள் எல்லோரும் சேர்ந்து இங்கே அனுமதிக்க வேண்டும், அனுமதிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள் என்றால், ஏற்கெனவே அவர்கள் திட்டம் போட்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை. இங்கே ஏதேனும் குழப்பம் நடத்த வேண்டும். இடைஞ்சல் செய்ய வேண்டும். குறுக்கீடு செய்ய வேண்டும் என்ற நோக்கம்தான் அதில் இருக்கிறதே தவிர சட்ட மன்றத்தில் விளக்கம் பெற வேண்டுமென்றோ, அதன் மூலம் நாடு நலம் பெற வேண்டுமென்றொ எண்ணி, இந்தப் பிரச்சினையை எழுப்புகிறார்களா என்று தெரியவில்லை. ஆனாலும் கூட, இப்படிப்பட்ட முறைகள் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் சட்டமன்றத்தினுடைய விதி முறைகளுக்கு முற்றிலும் உகந்தவை அல்ல என்பதை இவர்கள் உணராவிட்டாலும், நாட்டு மக்கள் தெளிவாக உணர்வார்கள். ஆகவே இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் திட்பமாக, தெளிவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலில் சொன்னதற்குப் பிறகும்,

1993 ஏப்ரல் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இங்கே கூச்சல் போட்டுக் கொண்டு, இந்த அவையினுடைய நேரத்தை விணடித்துக்கொண்டிருந்தது மிக மிகக் கண்டிக்கத் தக்கது என்பதை மட்டும் அவைக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினையில் எதிர்கட்சித் தலைவர் தன்னைப் பேசவே அனுமதிப்பதில்லை, அனுமதிப்பதில்லை என்பதைத் திரும்பத் திரும்ப பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லி இருக்கிறார். அவரைப் பேச நான் அனுமதித்து, அந்தப்பிரச்சினையைப்பற்றி எழுப்புவதற்கு அவரை அனுமதித்து, அவரும் ஒரு கருத்தைச் சொன்னார். அந்தக் கருத்தைச் சொன்னதற்குப் பிறகு, அதற்கு நானும் பதிலைச் சொன்னேன். அப்படிப் பதில் சொன்னதற்குப் பிறகுதான் இதந்தப் பிரச்சினையே எழுந்ததே தவிர, அவரைப் பேசவே அனுமதிக்கவில்லை என்பது சரியல்ல.

முற்பகல் 11-40

4. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டம், வேடசந்தூர் தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டிய அவசியம் குறித்து— தொடர்ச்சி.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள அறிக்கையில் அண்ணா மாவட்டம் முழுமைக்கும் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ரூ. 99.58 லட்சமும் மற்ற வேலைத் திட்டங்களுக்காக ரூ. 39.87 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே வறட்சியின் கோரப்பிடியில் சிக்கியிருக்கிற வேடசந்தூர் தொகுதிக்கு இதில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது? அது எந்த இனங்களில் செலவழிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி வறட்சி ஏற்படுகிறபோது வறட்சி வந்தபிறகு அதற்குப் பிறகு நடவடிக்கை எடுத்தால் குடி தண்ணீர் பஞ்சம் வந்துவிடும் என்பதற்காக முன்கூட்டியே பணம் ஒதுக்கியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு முன்னாலே பணம் ஒதுக்கியும் எங்கெங்கே வறட்சி வரும், எங்கெங்கே குடிதண்ணீர் பஞ்சம் வரும் என்று சொல்லி, நடவடிக்கை எடுத்த